# காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

## பொது அறிவித்தல்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான தரவுகளைக் பிரதான ஆவண மூலங்களிலிருந்து தொகுத்துள்ளது. இதன் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்ட தரவுத்தளத்திலுள்ள அனைத்துத் தரவுகளையும் மேற்கொண்டு தொடர்வதற்காகஇ தரவுத்தளத்தினை இறுதித் தொகுப்பு செய்யும் செயன்முறை இடம்பெறுகின்றது. அவ்வகையில் அலுவலகம் தற்காலிக தகவற்பட்டியலை 2020 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளதுடன் காணாமற்போனோர் பற்றிய விபரங்களைப் பார்வையிடுமாறும் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.

எனினும்,கொவிட் 19 பரவுகை காரணமாக ஏற்பட்ட சூழ்நிலைகள் மற்றும் பயணத் தடைகள் போன்றவற்றினால் விபரங்களைப் பார்வையிடுவதிலுள்ள சிக்கல் தன்மைகளை அலுவலகம் அறிந்துள்ளது.

எனவே, இவ் அலுவலகம் தரவுகளை மூன்று பிரதான பகுதிகளாக வகுத்துள்ளது. அவை முதலாவது பகுதி 2000-2021 இற்கு இடைப்பட்ட கால முறைப்பாடுகளையும், இரண்டாவது பகுதி 1981-1999 இற்கு இடைப்பட்ட கால முறைப்பாடுகளையும், மூன்றாவது பகுதி 1980 இற்கு முற்பட்ட கால முறைப்பாடுகளையும், கொண்டதாக அமைந்துள்ளன. முதலாம் பகுதியிலுள்ள முறைப்பாடுகளுக்கு சீர்செய்தல் செயற்பாடுகள் முன்னுரிமையளிக்கப்பட்டு இடம்பெறுகின்றன.

இதற்கமைவாக, பொதுமக்கள், குறிப்பாகக் காணாமற்போனோரின் குடும்பங்கள் உறவினர்கள் அன்புக்குரியவர்கள் அனைவரும்

- பிராந்திய அலுவலகததிற்குச் சமூகம் தருவதன் மூலமாவோ, அல்லது www.ompsrilanka.org/missing-persons என்ற இணையதளத்தைப் பயன்படுத்தியோ காணாமற்போனோரின் விபரங்களைப் பரிசீலனை செய்து கொள்ளவும்,
- முறைப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட தகவல்களை உறுதி செய்து கொள்ளவும், ஆவணங்களையும், செயற்பாடுகளையும், பார்வையிடவும், முறைப்பாட்டின் விபரங்களை செம்மைப்படுத்துவதற்கும், அதனுடன் சம்பந்தப்பட்ட பதிவுகளை சீர்மைப்படுத்துவதற்கும், அலுவலக அதிகாரிகளுக்கு உதவி புரியவும்,
- முறைப்பாடு ஏதும் வழங்கத் தவறியிருப்பின், புதிய முறைப்பாட்டினை வழங்குவதற்கோ அல்லது தகவலை வழங்குவதற்கோ மூன்று மாத காலத்தவணையினைப் (நவம்பர் 03 முதல் 2022 பெப்ரவரி 03 வரை) பயன்படுத்திக்கொள்ளவும்,

இத்தால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி செயற்பாடு எதிர்வரும் 03.02.2022 திகதியன்று, வியாழக்கிழமை, இலங்கை நேரம் பி.ப 4.00 மணியுடன் நிறைவடையவுள்ளது. மேலதிக விபரங்களுக்கும், தகவல்களுக்கும் 011 230 1721 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்கவும்.

தவிசாளர்

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

03.11.2021